**<u>செய்தி வெளியீடு: 525</u>** **<u>4.7.2008</u>**

## தமிழகம் முழுவதிலும் 3,784 கிலோ மீட்டர் நீள சாலைகளையும் 284 பாலங்களையும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளுக்கு 905 கோடி ரூபாய் அனுமதி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

தமிழகத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் இவ்வரசு முக்கிய கவனம் செலுத்திவருகிறது. நடப்பு ஆண்டில் (2008–2009) ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்,

819 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளையும், அவற்றில் 98 பாலங்களையும் 353 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவிலும்,

788 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில முக்கியச் சாலைகளையும், அவற்றில் 55 பாலங்களையும் 236 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவிலும்,

1354 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும், அவற்றில் 99 பாலங்களையும் 204 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலும்,

823 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் (ஆதி திராவிட குடியிருப்பு சாலைகள் திட்டம்), அவற்றில் 32 பாலங்களையும் 110 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிலும்

–ஆக மொத்தம் 3784 கிலோமீட்டர் நீள சாலைகளை அவற்றில் சிறிய மற்றும் பெரிய பாலங்களாக அமையும் 284 பாலங்களுடன் 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இதன்மூலம் ஏறத்தாழ 364 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளில் அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் நிறைவேறியபின் திருவாரூர், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய 17 மாவட்டங்களில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், இடைவழித் தடம் அல்லது இருவழித் தடம் கொண்டவையாக அகலப்படுத்தப்படும்.

**இதனால் இம்மாவட்டங்களில் மாநில நெடுஞ்சாலைகளில் ஒருவழித் தடமே இல்லாத நிலை உருவாகும். இவையல்லாமல் 455 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளும் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்.**

**மாவட்ட முக்கியச் சாலைகளில் 291 கிலோமீட்டர் நீள சாலைகள் அகலப்படுத்தப்படுவதுடன் 497 கிலோமீட்டர் நீள சாலைகள் மேம்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும். மாவட்ட இதர சாலைகளில் 1259 கிலோமீட்டர் நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 95 கிலோமீட்டர் நீள சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்துடன், 44 பேருந்து நிறுத்தங்கள் அமைத்தல் (**bus lay byes**), 34 விபத்துப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகளும்**;

**2006இல் இந்த அரசு அமைந்தபின், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்லும் மாவட்ட இதர சாலைகளில் 823 கிலோமீட்டர் நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகளும்,**

**மேலும், இவ்வாண்டு அரசு அறிவித்தவாறு 27 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் 81 கிலோமீட்டர் நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

**மொத்தம், 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்த சாலைப்பணிகள் அனைத்தையும் விரைவில் தொடங்கி, நிர்ணயிக்கப்பட்ட காலஅளவுக்குள் நிறைவேற்றி முடிக்குமாறு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.**

*******

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.